சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS.85/2015**

2024ம் ஆண்டு நவம்பர் மாதம் 25ம் நாள் திங்கட்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.1**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.வெ.லட்சுமி, எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப் பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேட்டு | தொழில் | விவசாயம் |
| தந்தை பெயர் | வீரபத்திரன் | ஜாதி | |
| கிராமம் | அரிமாநகர் கிராமம் | சமயம் | |
| தாலுக்கா | போளூர் | வயது | |

**25.11.2024** முதல் விசாரணை

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS 307/2013 வழக்கின் வழக்குரையின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற IA 796/2013ன் OS 307/2013 மனு மற்றும் உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற IA 795/2013ன் OS 307/2013 மனு மற்றும் உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற IA 796/2013ன் OS 307/2013 வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS 307/2013 21.07.2014 தேதியிட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 15.04.2010 தேதியிட்ட சோமு ஜுவல்லரி ரசீது அசல் **வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கொண்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.